நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு**

First Published : 28 Mar 2011 04:49:42 AM IST
Last Updated : 28 Mar 2011 06:04:38 AM IST

சென்னை, மார்ச் 27: சென்னையில் ஆவின் பால் பாக்கெட்டுகளுக்கு மீண்டும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் மாலை நேர பால் பாக்கெட் விநியோக அட்டைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

ஆவின் நிறுவனம் சென்னையில் தினமும் 10.50 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது.

இதில் மாதாந்திர பால் அட்டைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தினமும் 7 லட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தையடுத்து, அரசு பால் கொள்முதல் விலை உயர்த்தியது. இதன்படி, லிட்டருக்கு ரூ. 18-க்கு பால் கொள்முதல் செய்து, 17.75 பைசா விலையில் வாடிக்கையாளர்களுக்கு ஆவின் நிர்வாகம் இப்போது விற்பனை செய்து வருகிறது. இதனால், ஏற்படும் இழப்பையும் ஆவின் நிறுவனம் சமாளித்து வருகிறது.

சென்னையில் முகவரி சான்றுடன் விண்ணப்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கு காலை, மாலை இருவேளைகளுக்குமான பால் பாக்கெட்டுகளைப் பெற நீலநிறத்தில் தனித் தனி மாதாந்திர அட்டைகளை ஆவின் நிர்வாகம் வழங்கி வருகிறது.

ஆவின் நிறுவனம் தனது சமன்படுத்திய பாலை (டோன்டு மில்க்) , மாதாந்திர அட்டைதாரர்களுக்கு அரை லிட்டருக்கு ரூ. 8.90- என்ற விலையில் விநியோகிக்கிறது.

பால் அட்டை இல்லாதவர்கள், முகவர்கள் உள்ளிட்டோருக்கு இதே ரக பால் அதிகபட்ச விற்பனை விலையாக (எம்.ஆர்.பி.) அரை லிட்டர் ரூ. 10.25-க்கு விற்கப்படுகிறது.

25 பைசா செல்லாததால் சிக்கல்: இப்போது 25 பைசாவுக்கு கீழ் குறைந்த மதிப்புள்ள பைசா நாணயங்களை ரிசர்வ் வங்கி ரத்து செய்துள்ளதையடுத்து, இந்த ரக பால் விற்பனை விலையை நிர்ணயிப்பதில் ஆவின் நிர்வாகத்துக்கு சிக்கல் எழுந்துள்ளது.

இதேபோல நிலை நிறுத்திய அரை லிட்டர் பால் ரூ. 11-என்ற விலையில் அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அட்டை இல்லாதோருக்கு இந்த ரக பாலின் அதிகபட்ச விற்பனை விலை அரை லிட்டருக்கு ரூ. 13 என்று நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், வெளிச்சந்தையில் தனியார் நிறுவனங்கள் வழங்கும் இந்த ரக பால் பாக்கெட் (அரை லிட்டர்) ரூ. 17 வரை நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக ஆவின் பால் பாக்கெட்டுகளை விட, தனியார் நிறுவனங்கள் விநியோகிக்கும் பால் பாக்கெட்டுகளின் விலை லிட்டருக்கு ரூ. 9 கூடுதலாக விற்கப்படுகிறது. இதனால், ஆவின் பாலுக்கு தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மாலை நேர அட்டைகள் ரத்து: இந்த நிலையில், மாலை நேரத்தில் பால் பாக்கெட் விநியோகத்தை கடந்த 16-ம் தேதி முதல் ஆவின் நிர்வாகம் நிறுத்தியுள்ளது. தினமும் மாலை நேர அட்டைகளுக்காக 30 ஆயிரம் லிட்டர் மட்டுமே பால் பாக்கெட்டுகளை ஆவின் விநியோகித்து வந்தது. இதையடுத்து, ஒரே முறையாக காலையில் மட்டும் அட்டைதாரர்கள் தேவையான அளவில் பால் பாக்கெட்டுகளை பெறுவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சிக்கன நடவடிக்கை காரணமாக மாலை நேர பால் அட்டைகள் விநியோகம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஆவின் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால், குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாத சாதாரண மக்கள் மாலை நேரத்தில் பால் பாக்கெட்டுகளைப் பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சென்னையில் மட்டும் ஆவின் அனுமதி பெற்ற 38 முகவர்கள் பால் விற்பனை செய்து வருகின்றனர். இவர்களுக்கு மட்டும் 2.50 லட்சம் லிட்டர் பால் தினமும் விநியோகிக்கப்படுகிறது. இப்போது பால் வரத்து குறைந்துள்ளதால் பால் பாக்கெட்டுகள் மற்றும் வெண்ணெய்,நெய், ஐஸ்கிரீம் உள்ளிட்ட இதர பால் பொருள்களும் போதிய அளவு கிடைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

இதையடுத்து, ஆவின் பால் பாக்கெட்டுகளை விரும்பிக் கேட்கும் வாடிக்கையாளர்களிடம் தனியார் நிறுவன பால் பாக்கெட்டுகளை வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் மிகுந்த ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளனர்.

ஆனால், பொதுவாக ஜனவரி முதல் மார்ச் வரை பால் உற்பத்தி, வரத்து சற்று குறைவாக இருக்கும். இது ஏப்ரல் முதல் வாரத்தில் சீராகத் தொடங்கும். எனினும், மாதாந்திர அட்டைதாரர்களுக்கும், அனுமதி பெற்ற முகவர்களுக்கும் பால் விநியோகத்தில் பாதிப்பு இல்லை என்று ஆவின் வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

எனினும், ஆவின் மாதாந்திர அட்டைகளைப் பயன்படுத்தி வாங்கப்படும் பால் பாக்கெட்டுகளை ஹோட்டல்களுக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதால் செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கிடப்பில் கிடக்கும் ஆன்லைன் திட்டம்: இத்தகைய முறைகேடுகளைத் தடுக்கும் வகையில், அட்டைகளுக்கு சிறப்பு குறியீட்டு எண் வழங்கி கணினிமயமாக்கும் திட்டம் இன்னமும் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது. சென்னையில் உள்ள 18 மண்டலங்களிலும் அந்தந்தப் பகுதி வாடிக்கையாளர்களுக்கும் படிப்படியாக ஆன்லைன் முறையில் கட்டணம் செலுத்தி பால் அட்டை வழங்கும் திட்டமும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

## சூறைக்காற்றில் வாழை, வெற்றிலைப் பயிர்கள் சேதம்

First Published : 27 Mar 2011 11:58:58 AM IST

முசிறி, மார்ச் 26: திருச்சி மாவட்டம், தொட்டியம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு வீசிய சூறைக்காற்றால் சுமார் 500 ஏக்கர் வாழைகள், 100 ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால்கள் சேதமடைந்தன.

தொட்டியம், வரதராஜபுரம், கவுத்தனூர், கோட்டைமேடு, கிளிஞ்சநத்தம், அரங்கூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் வயல்களில் வாழை, வெற்றிலைக் கொடிக்கால்கள் சாகுபடி செய்திருந்தனர். வாழைகள் குலைத்தள்ளிய நிலையிலும், வெற்றிலைக் கொடிகள் கிள்ளும் பருவத்திலும் இருந்தன.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. அப்போது, கடும் சூறைக்காற்றும் வீசியது. இதனால், அந்தப் பகுதியில் சுமார் 500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழைகள் ஒடிந்து விழுந்தன. மேலும், கிள்ளும் பருவத்திலிருந்த வெற்றிலைக் கொடிகள் படர விடப்பட்டிருந்த கம்புகளுடன் கீழே சாய்ந்தன. இதனால், வெற்றிலைக் கொடிகளின் வேர் பாகம் பிடுங்கப்பட்டு, கொடிகள் சேதம் அடைந்தன.

"எதிர்பாராத இந்தச் சூறைக்காற்றால் விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகியுள்ளனர். எனவே, உடனடியாக அதிகாரிகளை சம்பவ இடங்களுக்கு அனுப்பி, சேத மதிப்பைக் கணக்கிட்டு, விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை விரைந்து வழங்க அரசு முன்வர வேண்டும்' என இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

சாலை மறியல்: இதனிடையே, சேதமடைந்த பயிர்களைப் பார்வையிட அதிகாரிகள் வராததால், பாதிக்கப்பட்ட விவசாயிகள், பொதுமக்கள் தொட்டியம், மகேந்திரமங்கலம் ஆகிய இடங்களில் சனிக்கிழமை திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, தொட்டியம் வட்டாட்சியர் லீலாவதி, சம்பவ இடங்களுக்கு வந்து மறியலில் ஈடுபட்டோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் உறுதியளித்ததைத் தொடர்ந்து, சாலை மறியல் போராட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

**சூறைக்காற்று: குளித்தலை பகுதியில் ரூ. 4 லட்சம் வாழை மரங்கள் சேதம்**

First Published : 27 Mar 2011 11:06:54 AM IST

குளித்தலை, மார்ச் 26: கரூர் மாவட்டம், குளித்தலை பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை வீசிய பலத்த சூறைக்காற்றால் ரூ. 4 லட்சம் வாழை மரங்கள் சேதமடைந்தன.

குளித்தலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த சூறைக்காற்று வீசியது. இதனால், சாலைகளில் வாகனங்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. தொடர்ந்து, பலத்த இடியுடன் மழை பெய்தது.

பலத்த காற்றில் குளித்தலை ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட பல இடங்களில் வாழை மரங்கள் சேதமடைந்தன. இவற்றின் மதிப்பு சுமார் ரூ. 4 லட்சம் எனக் கூறப்படுகிறது.

**விவசாயிகளுக்கு தடையில்லா மும்முனை மின்சாரம்**

First Published : 27 Mar 2011 12:01:13 PM IST

மணப்பாறை,மார்ச் 26: மணப்பாறை பேரவைத் தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அதிமுக வேட்பாளர் ஆர். சந்திரசேகர் (படம் ).

மணப்பாறையிலுள்ள கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி கிளை அலுவலகத்தில் சனிக்கிழமை அவர் கூறியது:

இந்தத் தொகுதியில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தால் மக்களை எளிய முறையில் சந்திப்பேன். தொகுதியில் உள்ள மணப்பாறை, வையம்பட்டி, மருங்காபுரி ஒன்றியங்களில் ஏற்படும் பிரச்னைகளுக்கு உடனடித் தீர்வை ஏற்படுத்த முயற்சிப்பேன்.

மணப்பாறை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசுக் கல்லூரி அமைந்திடவும், காய், கனி பதப்படுத்தும் குளிரூட்டும் நிலையமும் உருவாக்கப்படும். மேலும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரக்கூடிய தொழில்சாலை அமையவும் பாடுபடுவேன்.

தொகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதி, பொது சுகாதாரத்தை நிறைவேற்றித் தருவேன். தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் மணப்பாறை தொகுதி மக்களுக்குக் கிடைக்க பேரவையில் குரல் கொடுப்பேன்.

அதிமுக பொதுச் செயலர் ஜெயலலிதா தலைமையில் நல்லாட்சி அமைவது உறுதி. அவ்வாறு அமையும் ஆட்சியின் மூலம் பல்வேறு நலத் திட்டங்களைப் பெற்றுத் தந்து, மாநிலத்தில் ஒரு முன்னணி பேரவைத் தொகுதியாக மணப்பாறையை மாற்ற முயற்சிப்பேன் என்றார் அவர்.

அதிமுக நகரச் செயலர் பவுன் எம். ராமமூர்த்தி, ஒன்றியச் செயலர் எம்.பி. வெங்கடாசலம், தொகுதிச் செயலர் வழக்குரைஞர் முருகன், முன்னாள் நகரச் செயலர் எம். அகமது சரீப் ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**திசு வாழையில் கூடுதல் மகசூல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2011,00:54 IST

தர்மபுரி: வெளி மாநிலங்களில் வாழை சாகுபடி குறைந்துள்ளதால், வாழை பழங்களுக்கு கூடுதல் மவுசு ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் குறைந்த நாளில் மகசூல் தரும் திசு வாழையை பயிரிட்டு கூடுதல் வருவாய் பெறுமாறு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து வேளாண் வணிக அலுவலர் தாம்சன் கூறியது: குறைந்த நாட்களில் மகசூல் தரும் திசு வாழை விவசாயிகள் மத்தியில் சாகுபடி செய்ய அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. திசு வாழைக்கு அதிக அளவு தண்ணீர் தேவையிருக்காது, எனினும் தண்ணீர் சிக்கன தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் போதிய தண்ணீர் ஆதாரம் கிடைத்துவிடும். மாவட்டத்தில் பஞ்சப்பள்ளி, பாலக்கோடு, நம்மாண்டஅள்ளி, காரிமங்கலம், பாப்பாரப்பட்டி உள்ளிட்ட இடங்களில் வாழை சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர். கற்பூரவள்ளி, ஏலக்கி, பச்சை, பூவன் ஆகிய இனங்களை சேர்ந்த வாழை செடிகளுக்கு அதிக மவுசு உள்ளது. மேலும் இந்த பழங்கள் வெளி மாநிலங்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஒரு ஏக்கரில் ஆயிரம் முதல் 1,500 மரங்கள் வீதம் மொத்தம் 2,700 ஏக்கரில் விவசாயிகள் வாழை நடவு செய்யலாம். இதன் மூலம் ஏக்கருக்கு 50 ஆயிரம் வரை லாபம் பெற முடியும். விரிவுப்படுத்தியுள்ள திசு வளர்ப்பு திட்டத்தின் மூலம் தேவையான வாழை செடிகள் வழங்கப்படுகிறது. இதை தவிர 25 சதவீதம் கூடுதலான வாழை தார்களை அண்டை மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது. திசு வாழையை விவசாயிகள் பயிரிட்டு குறைந்த நாட்களில் கூடுதல் வருவாய் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2011,00:48 IST

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்க மத்தூர் ஒன்றிய செயற்குழு கூட்டம் மத்தூரில் நடந்தது. மாவட்ட செயலாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். பொருளாளர் கருணாமூர்த்தி, துணை செயலாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முத்து வரவேற்றார். மாவட்ட தலைவர் லோகாபிராம் தீர்மானங்கள் குறித்து பேசினார். "வாலிப்பட்டி-அந்தேரிப்பட்டி இடையில் பெனுகொண்டாபுரம் ஏரி உபரி நீர் செல்லும் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டும். பெனுகொண்டாபும் ஏரி கால்வாயை தூர் வார வேண்டும்' உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றினர். மாவட்ட செயலாளர் சரவணன், பெரியண்ணன், இளைஞர் அணி செயலாளர்கள் குமார், இளங்கோ, துணை செயலாளர் செந்தில்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். தங்கராஜ் நன்றி கூறினார்.

**நிலத்தடி நீர் மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.56 கோடி நிதி... ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2011,00:02 IST

தேனி : தேனி மாவட்டத்தில் கருமை ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்த 56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டிபட்டி, கடமலை மயிலை, தேனி, பெரியகுளம், சின்னமனூர் ஒன்றியங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்து விட்டது. இங்கு 600 அடிக்கு மேல் போர் போட்டால் மட்டுமே தண்ணீர் கிடைக்கிறது. மழை பெய்தாலும் இங்குள்ள கண்மாய்களும் நிரம்புவதில்லை. நீர் வரத்து வாய்க்கால்களும் தூர்ந்து போய் காணப்படுகின்றன. இதனால் மானாவாரி சாகுபடி தவிர வேறு எந்த விவசாயமும் செய்ய முடியவில்லை. எனவேதான் இந்த ஒன்றியங்களை மாவட்டத்தின் கருமை பகுதிகளாக அரசு அறிவித்துள்ளது. இப்பகுதிகளை மேம்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மாவட்ட நிர்வாகம், விவசாயத்துறையுடன் இணைந்து 56 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயாரித்துள்ளது. இதற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. மத்திய நிலத்தடி நீர் ஆணைய அதிகாரிகள் குழு இந்த ஒன்றியங்களை நேரடியாக ஆய்வு செய்து பணிகள் நடக்கும் இடங்களை தேர்வு செய்துள்ளனர். இந்நிதியில் இருந்து சிறு குளங்கள் வெட்டுதல், நீர் வரத்து வாய்க்கால்களை தூர்வாறுதல், தடுப்பணைகள் கட்டுதல், கண்மாய், குளங்களை ஆழப்படுத்துதல், மரக்கன்றுகள் நடுதல், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல், குடிநீர் தட்டுப்பாடுள்ள பகுதிகளில், நீர் ஆதாரங்களை மேம் படுத்தி குடிநீர் வழங்குதல், உட்பட பல்வேறு பணிகள் நடைபெற உள்ளன. பணிகள் நடக்கும் பகுதிகளில் விவசாயிகளுக்கும் பல்வேறு நலத்திட்ட

உதவிகள் வழங்கப்பட உள்ளன. தேர்தல் முடிந்த பின் இதற்கான பணிகள் துவங்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விருதுநகரில் காய்கறி விலை நிலவரம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,23:52 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில் கிலோ கத்தரிக்காய், பீர்க்கங்காய், கேரட், உருளைக்கிழங்கு, காலிபிளவர் தலா 20 ரூபாய், தக்காளி, வெண்டைக்காய், சுரைக்காய் தலா 8, பாகற்காய், அவரைக்காய், சவ்சவ், சிறிய வெங்காயம், பச்சை மிளகாய் தலா 24, முள்ளங்கி, சீனிவரைக்காய், பல்லாரி தலா 16 ரூபாய்.
பச்சை பீன்ஸ், கருனை, சேணை, மல்லி தழை, முருங்கைகாய் தலா 32, பட்டாணி, எலுமிச்சம் பழம் தலா 70, பச்சை பீன்ஸ் 120, சிவப்பு பீன்ஸ், அதலைக்காய் தலா, 60, பீட்ருட், புடலங்காய், முட்டை கோஸ் தலா 14, சேம்பு, கறிவேப்பிலை தலா 36, மாங்காய் 40, டர்னிப், நூக்கல் தலா 30, இஞ்சி 40, பூசணிக்காய் 12 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.

**பத்து ரூபாய்க்கு 3 கிலோ தக்காளி அதிக விளைச்சலால் விலை சரிந்தது**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,22:01 IST

ரிஷிவந்தியம் : தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதால் 10 ரூபாய்க்கு மூன்று கிலோ என விற்பனை செய்ததால் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். கடந்த சில மாதங்களாக காய்கறிகளின் விலை உச்சத்தை தொட்டது. இந்நிலையில் தக்காளி விளைச்சல் திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. இங்கு விளையும் தக்காளி மாவட்டத்தின் அனைத்து பகுதிக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது அதிகளவில் விளைந்துள்ள தக்காளியை மினி டெம்போவில் எடுத்து சென்று அருகில் உள்ள மாவட்டங்களில் விற்பனை செய்கின்றனர். ரிஷிவந்தியம் அடுத்த பகண்டை கூட்டுரோடு பகுதியில் நேற்று மினிடெம்போவில் கொண்டு வந்து தக்காளி விற்பனை செய்யப்பட்டது. மூன்று கிலோ தக்காளி 10 ரூபாய் என கூவி கூவி விற்பனை செய்தனர். விலை மலிவாக இருந்ததால் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கினர்.

## பருத்தி அறுவடைக்கு கூலி ஆட்கள் தட்டுப்பாடு

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,00:59 IST

ஆத்தூர்: தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் தினமும், 119 ரூபாய் கூலி வழங்குவதால், ஆத்தூர் பகுதியில் பருத்தி, மஞ்சள் அறுவடை பணிகளுக்கு ஆட்கள் கிடைக்காத நிலை உள்ளது. ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, வாழப்பாடி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதியில், 40 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பருத்தி பயிரிடப்படுகிறது. பருத்தி பயிர் வளர்ச்சிக்கு ஏற்ப தட்ப வெப்பநிலை உள்ளதால், அதிக மகசூல் கிடைக்கிறது. 10 ஆயிரம் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்வதால், பல்லாயிரக் கணக்கான கூலி தொழிலாளர்கள் பணிக்கு தேவைப்படுகின்றனர். தற்போது, பருத்தி செடிகளில் காய் வெடித்து அறுவடைக்கு தயாராகி வருகிறது. இதனிடையே, கிராம பகுதியில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தொழியலாளர்களுக்கு தினமும், 119 ரூபாய் கூலி தொகை வழங்கப்படுகிறது. அதனால், கிராம பகுதியில் பெரும்பாலான மக்கள் விவசாய பணிகளில் ஆர்வம் காட்டுவதில்லை. விளைந்த பயிர்களை அறுவடை செய்வதற்கு கூலி ஆட்கள் கிடைக்காததால், விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.
இதுகுறித்து ஆத்தூர் மஞ்சினியை சேர்ந்த விவசாயி சுமதி கூறியதாவது: பருத்தி, மஞ்சள் பயிர்கள் அறுவடை நிலையில் உள்ளது. கூலி தொழிலாளர்கள் கிடைக்காததால், அறுவடை செய்ய முடியவில்லை. செடிகளில் வெடித்துள்ள பருத்தி காய்களை எடுப்பதற்கு கூலி ஆட்கள் கிடைக்காததாலும், மகசூல் பாதிக்கும் நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சத்தி வனப்பகுதியில் வன விலங்கு கணக்கெடுப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,00:42 IST

சத்தியமங்கலம்: சத்தி வனப்பகுதியில் வனவிலங்கு கணக்கெடுப்பு பணி துவங்கியது. மூன்று நாட்கள் இந்த கணக்கெடுப்பு நடக்கிறது.
சத்தி வனக்கோட்டத்துக்கு உட்பட்ட வனப்பகுதிகளில் வசிக்கும் வன விலங்குகளை கணக்கெடுக்கும் பணி ஆண்டுதோறும் நடக்கிறது. நேற்று முன்தினம் ஒரே நேரத்தில், சத்தியமங்கலம், ஆசனூர், தாளவாடி, பவானிசாகர் மற்றும் டி.என். பாளையம் ஆகிய வனப்பகுதியில் கணக்கெடுப்பு நடந்தது. கணக்கெடுப்பில் கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், வன ஊழியர்கள் உள்ளிட்ட 200 பேர் கலந்துகொண்டனர். இவர்கள் 40 குழுக்களாக பிரிந்து, வனப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் தங்கியிருந்து தண்ணீர் குடிக்கவரும் வனவிலங்குகளை பார்த்து கணக்கெடுத்தல், வனவிலங்குகளின் பாதத் சுவடுகள் மற்றும் எச்சங்களை பார்த்து கணக்கெடுத்தல் ஆகிய விதங்களில் கணக்கெடுப்பு நடத்துகின்றனர்.

"நேற்று முன்தினம் துவங்கிய இப்பணி, இன்று மாலை வரை மூன்று நாட்கள் நடக்கும்' என, சத்தியமங்கலம் மாவட்ட வன அதிகாரி சதீஷ் தெரிவித்தார்

**"மண் வளம் காப்பது அவசியம்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,20:43 IST

கோவை : "ஆங்காங்கே அசுத்தமாகவுள்ள மண்ணை குணப்படுத்தி, வனசூழலை பாதுகாக்க வனத்துறை சார்பில் தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது' என, வன மரபியல் நிறுவன கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில் அசுத்தமான மண்ணை உயிரியல் முறையில் குணப்படுத்துதல் குறித்த கருத்தரங்கு நடந்தது. மாநில முதன்மை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) ஆனந்த் நாயக் வரவேற்றார். மாநில கூடுதல், முதன்மை மற்றும் தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) பரூவா தலைமை வகித்தார். மாநில முதன்மை வனப்பாது காவலர் இருளாண்டி (விரிவு) முன்னிலை வகித்து பேசியதாவது: தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. பொருளாதார முன்னேற்றத்துக்கு தொழிற்சாலைகளின் வளர்ச்சி முக்கியம். தொழிற்சாலை கழிவுகளால் சுற்றுச்சூழல் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. மண்வளம் சீர்கெடுகிறது. அசுத்தமான மண் வளத்தை, நுண்ணுயிர் மற்றும் தாவரங்கள் உள்ளிட்ட இரு முறைகளில் குணப்படுத்தலாம். அதில், தாவரங்களின் மூலமாக மண்ணை குணப்படுத்தி, வளத்தை மேம்படுத்துவது முக்கியமானது. தாவரங்கள் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் தன்மையுடையன. மண்ணிலுள்ள அசுத்தத்தை நீக்கி தன்னுள் வைத்து, மண்ணை குணப்படுத்துகிறது; நொதிகளின் மூலமாக உலோக அசுத்தத்தையும் நீக்கி சுத்தப்படுத்தும். அதேவேளையில், வேகமாக சுத்தப்படுத்தும் மரங்களை கண்டறிந்து, நுண்ணுயிர்களை சேர்த்து நட வேண்டும். மண்வளத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆராய்ச்சிகளும் தீவிரமாக நடக்கிறது.

இவ்வாறு, அவர் பேசினார். முன்னதாக, நிறுவன இயக்குனர் கிருஷ்ணகுமார் பேசியதாவது:இந்தியாவில் ஒரு லட்சம் எக்டேர் நிலம் சுரங்கப்பணிக்காக பயன்படுத்தப்படுகிறது. அங்குள்ள மண் வளம் அசுத்தமாகி, பயன்படுத்த முடியாத சூழல் நிலவுகிறது; வனச்சூழல் அதிகளவில் பாதிக்கப்படுகிறது; வனங்களிலுள்ள பூச்சிகள், விலங்குகள் போன்ற உயிரினங்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகிறது. வெப்பமயமாதல், பருவநிலை மாற்றம் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆங்காங்கே நிலங்களின் பகிர்வு, நடைமுறையின்மை, வாழ்க்கை முறைகள் மாற்றம் போன்றவையும் காரணமாகவுள்ளன. தொழிற்சாலை கழிவுநீர், வேதியியல் நச்சுப்பொருட்கள் ஆகியவை மண்ணிலேயே தொடர்ந்து படிக்கின்றன. மண் வளத்தை

உடனடியாக காப்பாற்ற முடியாவிட்டாலும், படிப்படியாக செயல்படுத்த வேண்டும். அதிகளவில் மரங்கள் நடப்பட வேண்டும். உயிரியல் மூலம் அசுத்தமாகவுள்ள மண்ணை குணப்படுத்தி, வனசூழலை பாதுகாக்க வனத்துறை சார்பில் 25 சதவீத முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. வனக்கல்லூரி, நிறுவனங்களின் சார்பிலும் முயற்சிகள் நடக்கின்றன. அதன் அடிப்படையில் ஏற்காடு, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் சுரங்கப் பகுதிகளில் மண் சுத்தப்படுத்தப்பட்டு, மீண்டும் வனங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு, அவர் பேசினார்.பல்வேறு வனக்கல்லூரிகளை சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாட்டை ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன் உட்பட பலர் செய்தனர்.

**மலை மாவட்டத்தில் நீல மலர்கள் : மனதை கொள்ளை கொள்ளும் அழகு**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,01:49 IST

ஊட்டி : நீலகிரியில் தற்போது, "ஜெகரண்டா' என்ற நீல நிறப்பூக்கள் பூத்து குலுங்குகின்றன. நீலகிரியில் நீல வண்ணங்களை கொண்ட தாவரங்கள் சொற்ப அளவிலேயே உள்ளன. இவ்வகை தாவரங்கள் பிரேசிலை தாயகமாகக் கொண்டு, மெக்சிகோ மற்றும் அர்ஜென்டினா போன்ற நாடுகளுக்கு பரவி 17, 18ம் நூற்றாண்டில் ஆசியாவிற்கு பரவியது. இவ்வகை தாவரங் களை,18ம் நூற்றாண்டின் இறுதியில் பேராசிரியர், "ஸ்டூவர்ட் மெகலன்' என்ற விஞ்ஞானி, இந்தியாவில் அறிமுகப்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில்,"பிக்னோனியேசியே' என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட, "ஜெகரண்டா மைமோசிபோலியா' என்ற வகை மரங்கள், ஊட்டி - குன்னூர் மலை சாலைகளின் ஓரத்தில் அதிகம் காணப்படுகின்றன.

இந்த மரங்களில் உள்ள நீல நிற மலர்களில், "லேவண்டர்' வாசனைப் பொருள் உள்ளதாக கூறப்படுகிறது. ஆண்டுதோறும் மார்ச், ஏப்ரல் மாதத்தில், இவை பூத்து குலுங்கும். இம்மரத்தில் உள்ள காய்கள், தட்டையாக 5 செ.மீ., முதல் 7 செ.மீ., வரை விட்டம் கொண்டவை. இம்மரம், மர இருக்கைகள் செய்யவும், பெட்டிகள் தயாரிக்கவும் பயன் படுகிறது. இம்மரத்தில் நன்கு பளபளப்பு ஏறும் என்பதால், ஈட்டி மரம் என தவறான தகவலை கூறி, சிலர் விற்பனை செய்கின்றனர். மரத்தின் கன்றுகள் 10 லிருந்து 30 ரூபாய் வரை வனத்துறை நர்சரிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. கோடை காலம் துவங்கியுள்ள நிலையில், தற்போது நீலகிரி முழுவதும், "ஜெகரண்டா' மலர்கள் பூத்து வனங்களை "நீல'மாக மாற்றி வருகிறது.

**மர கன்று நடு விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,01:47 IST

குன்னூர் : குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியில் மரம் நடு விழா நடந்தது. குன்னூர் வனத்துறை, நீலகிரி சுற்றுச்சூழல் சங்கம் மற்றும் நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி இணைந்து நடத்திய நடத்தி நிகழ்ச்சிக்கு, குன்னூர் ரேஞ்சர் பால்ராஜ் பேசுகையில், ""இரவும், பகலும் மாறி, மாறி வந்தாலும் அதன் அளவுகள் மாறுபட்டே இருக்கும். குளிர் காலம் மாறி மார்ச் 21 முதல் வசந்த காலம் பிறக்கிறது. குளிர் காலத்தில் அனைத்து தாவரங்களும் தன்னை காத்துக் கொள்ள வளர்ச்சியை நிறுத்தி கொள்கின்றன. மார்ச் 21ம் தேதி பூமத்திய ரேகை சூரியனை கடந்து வசந்த காலத்தை தோற்றுவிக்கிறது. இந்நாளை உலக வன நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது,'' என்றார். மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

**வனப்பகுதிகளின் அழிவால் பாதிப்புகள் ஏராளம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2011,01:46 IST

ஊட்டி : "வனப்பகுதிகளில் கான்கிரீட் கட்டடங்கள் அதிகரிப்பதால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும்,' என ஊட்டியில் நடந்த உலக வன தினத்தில் தெரிவிக்கப்பட்டது. நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாசார சேவை அறக்கட்டளை சார்பில், ஊட்டி பிங்கர்போஸ்ட் நிர்மலா உயர்நிலைப்பள்ளியில் உலக வன தினம் அனுசரிக்கப்பட்டது. பள்ளி முதல்வர் தெரசாமேத்யூ வரவேற்றார். நெஸ்ட் நிர்வாக அறங்காவலர் சிவதாஸ் பேசுகையில், ""மனிதர்களுக்கும், வனங்களுக்கும் உள்ள உறவு தொன்மையானது. வனங்களை பின் தள்ளி மனித சமுதாயம் வாழ முடியும் என்பது சாத்தியமற்றதாகும். இந்தியாவில் வாழும் அனைத்து மக்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வனங்களை சார்ந்தே வாழ்கின்றனர். விவசாய நாடான இங்கு பொருளாதாரம், வனங்களையும், இயற்கை வளங்களையும் நம்பியே உள்ளது.நீலகிரி வனங்களில் மனிதர்களால் ஏற்படும் வனத்தீயால் பறவை இனங்கள் ஊர்வன, தாவர இனங்கள் பூண்டோடு அழிவை சந்திக்கின்றன. மேலும், அன்னிய நாட்டு தாவர இனங்கள் லென்டனா, யூபிடோரியம், ஒடோரட்டம், கேசியாடோரா போன்ற பல தாவரங்கள் வனங்களை அதிகளவில் ஆக்கிரமிப்பதால் வனவிலங்குகளின் உணவு தேவை பாதிக்கின்றது. வனப்பகுதிகளில் கட்டப்படும் கான்கிரீட் கட்டடங்கள், வளர்ச்சிப் பணிகளால் பாதிப்புகள் ஏற்படும்,'' என்றார்.

ஊட்டி நகர மக்கள் விழிப்புணர்வு சங்க செயலாளர் ஜனார்தனன் பேசுகையில், "" இயற்கை வனங்களை பணக்கார வர்க்கங்கள் சுரண்டும் போக்கை தவிர்த்து, இயற்கை வளங்கள் எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்ல வேண்டிய மனோபாவத்துடன் வாழ வேண்டும்'' என்றார்.

சோலை மரக்கன்றுகள் மாணவர்கள் மூலம் நடவு செய்யப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர் பிரசில்லா ரம்யா நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெஸ்ட் மற்றும் சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மையத்தினர் செய்திருந்தினர்.

## *நீலகிரி மாவட்டத்தில் பிச்சீஸ் பழ சீசன் தொடக்கம்*



ஊட்டி அருகே ஒரு விவசாய தோட்டத்தில் பிச்சீஸ் பழங்கள் மரத்தில் காய்த்து குலுங்குவதை படத்தில் காணலாம்.

*ஊட்டி, மார்ச்.28–*

*நீலகிரி மாவட்டத்தில் தற் போது பிச்சீஸ் பழங்கள் காய்க்க தொடங்கி உள்ளது. நல்ல விலை கிடைக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

பழங்கள்

நீலகிரி மாவட்டம் பல்வேறு வகைகளில் சிறந்து விளங்குகி றது. தேயிலை உற்பத்தி, சுற்றுலா, மலை காய்கறிகள் என இந்த மாவட்டம் மாநிலத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இது தவிர இங்கு மலைப்பகுதிகளில் விளையக் கூடிய பல்வேறு வகையான பழங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

பழங்களின் ராணி எனப் படும் மங்குஸ்தான் பழங்கள், குழந்தை பாக்கியம் தரும் துரியன் பழங்கள், புளிப்பு சுவை கொண்ட பிளம்ஸ் பழங்கள், ஸ்ட்ராபெரி, ஆப்பிள், வாட்டர் புரூட், ஆரஞ்சு என பல்வேறு வகையான பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

காட்டு பழங்கள்

இது தவிர விக்கி, தவிட்டு பழம், ஊசி பழங்கள் உள்ளிட்ட இயற்கையாக காடுகளில் விளையும் காட்டுப்பழங்களும் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் நீலகிரியில் விளையும் பழங் கள் குறித்து சுற்றுலா பயணிகள் தெரிந்து கொள்ளும் வகையில் பழக்கண்காட்சி ஆண்டு தோறும் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2 நாட்கள் நடத்தப் படுகிறது.

இந்த பழக்கண்காட்சியில் நீலகிரியில் விளையும் பல் வேறு விதமான பழவகைள் வைக்கப்படும். இதனை சுற்றுலா பயணிகள் ஆர்வத் துடனும், ஆச்சரியத்துடனும் பார்வையிட்டு செல்வார் கள்.

பிச்சீஸ் பழங்கள்

தற்போது நீலகிரியில் பிச்சீஸ் பழ சீசன் தொடங்கியுள்ளது. இந்த பழங்கள் ஒரு வித புளிப்பு சுவையுடன் காணப்படும். பச்சை நிறத்தில் உள்ள இந்த பழங்களை பொதுமக்கள் மட்டுமல்லாது சுற்றுலா பயணிகளும் விரும்பி சாப்பிடு கின்றனர். தற்போது பிச்சீஸ் பழங் கள் காய்க்க தொடங்கி உள்ளதால் சீசனுக்கு ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் இதனை விரும்பி வாங்கி செல்கின்றனர். எனவே இந்த பழங்களுக்கு தற்போது நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## *அரசு தாவரவியல் பூங்காவில், சீசனை முன்னிட்டு கண்ணாடி மாளிகையில் மலர்செடிகள் அடுக்கும் பணி தீவிரம்*



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் மலர்செடிகள் அடுக்கும் பணியில் ஊழியர் ஈடுபட்டுள்ள காட்சி.

*ஊட்டி, மார்ச்.28–*

*ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சீசனை முன்னிட்டு மலர்ச் செடிகள் அடுக்கும் பணி நடைபெற்று வருகி றது.*

*சீசன்*

*ஊட்டியில் ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் சீசன் காலங் களாகும். இந்த சீசன் காலத்தில் தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணி கள் வருகை தருவார்கள்.*

*எனவே இங்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மலர்க்கண்காட்சி 3 நாட்கள் நடத்தப்பட உள்ளது. மேலும் பூங்கா முழுவதும் பல்வேறு வகையான மலர்*

செடிகள் சுமார் 2 லட்சம் எண்ணிக்கையில் நடவு செய்யப்பட்டு உள்ளது.

கண்ணாடி மாளிகை

தாவரவியல் பூங்காவில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது கட்டப்பட்ட கண்ணாடி மாளிகைகள் 2 உள்ளன. இதில் பூங்காவின் கீழ் பகுதியில் அமைந்துள்ள கண்ணாடி மாளிகையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மலர்ச்செடிகள் வளர்க்கப் படுகிறது.

இங்கு ஆண்டு முழுவதும் பூக்கள் பூத்து குலுங்கும் வகையில் பராமரிக்கப்படு கிறது. தற்போது இந்த மாளிகையில் இருந்த பழைய மலர்ச்செடிகள் அகற்றப்பட்டு புதிய மலர்செடிகள் வைக்கும் பணி நடைபெற்று வருகி றது.

லில்லி மலர்கள்

இதில் தற்போது புதிதாக மலர்ந்துள்ள லில்லி மலர்கள் சுற்றுலா பயணிகளை வெகு வாக கவர்ந்துள்ளது. சுமார் 5 அடி உயரத்திற்கும் வளரும் லில்லி மலர் செடியின் பூக்கள் பெரியதாக இருக்கும். மேலும் கண்கவர் வண்ணங்களில் இவை மலரும்.

பூங்காவில் தற்போது நடவு செய்யப்பட்டுள்ள மலர் செடிகளில் சால்வியா, பெட்டுனிய மலர்கள் தற்போது மலர தொடங்கியுள்ளது. மீதம் உள்ள மலர்கள் வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் பூத்து குலுங்க தொடங்கி விடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இது தவிர பூங்காவில் உள்ள புல்வெளியில் புதியதாக நிழற் குடைகள் அமைக்கும் பணி களும், நடைபாதை மற்றும் அலங்கார வேலிகளை சீரமைக்கும் பணிகளும் நடை பெற்று வருகிறது.

## குன்னூர் ஏல மையத்தில் 31 சதவீத தேயிலை தூள் தேக்கம்

குன்னூர், மார்ச்.28–

குன்னூர் தேயிலை தூள் ஏலத்தில் வர்த்தகம் களை கட்டாததால் சுமார் 31 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. மேலும் 1 கிலோ தேயிலை தூள் ரூ.3 வரை விலை வீழ்ச்சி அடைந்தது.

11 லட்சம் கிலோ தேயிலை தூள்

வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் குன்னூர் தேயிலை ஏல யைமத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை எண் 12–க்கான ஏலம் கடந்த 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 26 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது.

இதில் 8 லட்சத்து 1 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 25 ஆயிரம் கிலோ

டஸ்ட் ரகமாகவும் இருந்தது. தேயிலை தூள் விற்பனையை பொறுத்த வரை மந்தமாகவே இருந்தது.

விலை வீழ்ச்சி

ஏலத்தில் தேயிலை தூள் ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருந்தது. உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாமல் வியாபாரிகள் ஏலம் எடுக்காமல் இருந்தனர். ஏலத்தில் விற்பனை மந்தமாக இருந்ததால் 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

31 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 169 ஆக இருந்தது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூள் 175 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது.

இலை ரகம்


சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 48 ரூபாயில் இருந்து 54 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 126 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 132 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

கவலை

விற்பனை எண் 13–க்கான ஏலம் வருகிற 31, 1 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 12 லட்சத்து 7 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது. தற்போது தேயிலை தோட்ட தொழிலாளர் களின் கூலி உயர்ந்துள்ள நிலையில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைந்து வருவது விவசாயி களை கவலை அடைய செய்துள்ளது. மேலும் உரம் மற்றும் இடு பொருட் களின் விலையும் அதிகரித்து வருவ தால் பச்சை தேயிலைக்கு குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

# தாகம் தீர்க்கும் மான் கூட்டம்



கோடையின் உக்கிரம் வனப்பகுதியில் உள்ள வன விலங்குகளையும் வாட்டி வதைக்கிறது. தணியாத தாகத்துடன் அழகிய புள்ளி மான் கூட்டம் நீர் நிலைகளைத்தேடி வருவதை படத்தில் காணலாம். (மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் தான் இந்த காட்சி.)



மசினகுடி பகுதியில் சாலையோரங்களில் பூத்து குலுங்கும் ஜெகரண்டா மலர்களை படத்தில் காணலாம்.

## நீலகிரி மாவட்டத்தில்

# சாலையோரங்களில் பூத்து குலுங்கும் ஜெகரண்டா மலர்கள்

மசினகுடி, மார்ச்.28-

நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசனை வரவேற்கும் வகையில் சாலையோரங்களில் ஜெகரண்டா மலர்கள் பூத்து குலுங்குகின்றது.

### கோடை காலம்

நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் பனிகாலம் முடிந்தவுடன் கோடை காலம் தொடங்கி விடும். இந்த கால கட்டத்தில் வறண்ட காலநிலை நிலவும். வெயில் மற்றும் பனியின் தாக்கத்தால் பெரும் பாலான செடிகள், புற்கள் காய்ந்து காணப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் பல்வேறு வகையான மலர்கள் மலர்ந்து காணப்படும். இதில் கோடை காலத்தில் மட்டுமே பூக்கும் தன்மை கொண்ட ஜெகரண்டா மலர்கள் தற்போது நீலகிரி மாவட்டத்தில் பரவலாக பூத்து குலுங்க தொடங்கி உள்ளன.

### பிரேசில்

நீல நிற பூக்களுடன் சாலை யோரங்களில் பூத்து குலுங்கும் இந்த ஜெகரண்டா மலர்கள் பிரேசில் நாட்டை தாயகமாக கொண்டது. மெக்சிகோ, அர்ஜெண்டினா போன்ற பல நாடுகளில் இருந்து ஆசியா நாட்டிற்கு பரவிய இந்த ஜெகரண்டா மலர்கள் கோடை காலத்தில் மட்டுமே பூத்து குலுங்கும்.

இந்த பூக்கள் பூத்து குலங்கும் காலங்களில்மரத்தின் இலைகள் முழுவதும் உதிர்ந்து, மரம் முழுவதும் நீல நிற பூக்கள் பூத்து குலுங்கும். இந்த மலர்கள் காண்பவர்களின் மனதை கொள்ளை கொள்ளும் வகை யில் காட்சி அளிக்கும்.

### சாலையோரங்கள்

இந்த மலர்கள் தற்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை, மசினகுடி, மாயார், குன்னூர், ஊட்டி, மஞ்சூர் உள்பட பல்வேறு பகுதிகளில் பூத்து குலுங்குகிறது. இந்த மலர்கள் சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

குறிப்பாக ஊட்டி, குன்னூர், மேட்டுப்பாளையம் சாலையின் இருபுறங்களிலும் உள்ள இந்த ஜெகரண்டா மலர்கள் தற்போது பூத்துள்ளதால், ஊட்டி மற்றும் குன்னூருக்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏராளமானோர் இந்த மலர் களை கண்டு வாகனங் களை நிறுத்தி புகைப்படம் எடுத்து செல்கின்றனர். மேலும் பூக்களை பறித்தும் மகிழ்ச்சி யுடன் செல்கின்றனர்.

### கோடை சீசன்

தற்போது கோடை சீசன் நீலகிரியில் தொடங்க உள்ள நிலையில், பூத்து குலுங்கும் இந்த ஜெகரண்டா மலர்கள் கோடை சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை வரவேற்கும் விதமாக பூத்து குலுங்குவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## வர்த்தகர் வருகை குறைந்ததால் குன்னூரில் தேயிலை தேக்கம்

பதிவு செய்த நாள் 3/28/2011 4:01:17 AM



குன்னூர்: வர்த்தகர்கள் பங்கேற்பு குறைந்ததால் 31 சதவீத தேயிலை தூள் குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் தேக்கம் அடைந்தது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் (சிடிடிஏ) கடந்த வியாழன், வெள்ளி கிழமைகளில் ஏலம் நடைபெற்றது. 11.26 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 8.01 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.25 லட்சம் கிலோவும் அடங்கும். வெளி நாட்டு வர்த்தகர்கள் குறைந்த அளவில் பங்கேற்றனர். உள்நாட்டு வர்த்தகமும் களை கட்டாததால் 31 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது.

வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.48&ரூ.54, உயர் வகை ரூ.85&ரூ.126, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.50&ரூ.55, உயர் வகை 9 ரூ.85&ரூ.132 வரையிலும் விலை கிடைத்தது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோ ரூ.169, ஆர்தோடக்ஸ் ரகம் கிலோ ரூ.175ம் விலை கிடைத்தது.

**வரத்து அதிகரிப்பால் மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு ^800 சரிவு**

பதிவு செய்த நாள் 3/27/2011 2:35:40 AM



விருதுநகர்: வரத்து அதிகரிப்பால் மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு ^800 வரை சரிந்துள்ளது.

குண்டூர் வத்தல் மார்க்கெட்டிற்கு திங்கள், வெள்ளி கிழமைகளில் ஒரு லட்சம் மூட்டைகளும் மற்ற நாட்களில் 60 ஆயிரம் மூட்டைகளும் மிளகாய் வத்தல் வரத்து உள்ளது. இதனால் விருது நகர் வத்தல் மார்க்கெட்டிற்கு தினமும் 3 ஆயிரம் மூட்டை வத்தல் வரத்து உள்ளது. வரத்து அதிகரிப்பால் வத்தல் விலை குவிண்டாலுக்கு ^800 வரை குறைந்துள்ளது. சம்பா வத்தல் கு வின்டால் ^6 ஆயிரம் முதல் ^7,500 வரை விற்பனையானது. தொடர்ந்து வரத்து அதிகரித்தால் வரும் வாரங்களிலும் மேலும் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

சர்வதே சந்தையில் குரூட் பாமாயில் டன் 1,175 டாலரில் இருந்து 1,165 டாலராக குறைந்துள்ளது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு உயர்ந்துள்ளதால், பாமாயில் (15 கிலோ) டின் ^850 என விலை குறைந்து விற்பனையானது.